
தொப்பிகள் விற்பனைக்கு

ஒரு நாட்டுப்புறக் கதை




"தொப்பி வாங்கலையோ தொப்பி! பத்து ரூபாய்க்கு ஒன்று!" கூவுகின்றார் வியாபாரி . அவர் தலைக்கு மேலே உள்ள தொப்பிகளின் பெரிய குவியல் அலுங்காமல் குலுங்காமல் மிகவும் கவனமாக சாலையில் நடந்து செல்கிறார்.


ஒரு நாள் வியாபாரி கிராமப்புரத்திற்கு போனபோது களைத்துப்போய் ஒரு மரத்தின் அடியில் உட்கார்ந்து தூங்குகிறார். அவர் தூங்கும்போது, சில குறும்புக்கார குரங்குகள் அவரது தொப்பிகளை திருடிவிடுகின்றன. வியாபாரியின் தலையில் அணிந்திருந்த தொப்பி மட்டுமே இருந்தது. அவர் எழுந்ததும், தொப்பிகளை திரும்பப் பெற பல முயற்சிகளைச் செய்கிறார், ஆனால் தோல்வியடைகிறார். இறுதியில், அவர் வெற்றி பெறுகிறார்.

இந்த கதை சிறந்த நாட்டுப்புற கதைகளின் பாரம்பரியத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

தொப்பிகள் விற்பனைக்கு




ஒரு நாட்டுப்புறக் கதை




முன்னொரு காலத்தில் ஒரு தொப்பி வியாபாரி இருந்தார்.ஆனால் அவர் மற்ற வியாபாரிகள் போல் சாமான்களை முதுகில் சுமக்கமாட்டார்.தொப்பிகளை தனது தலையில் அடுக்கி செல்வது வழக்கம்.

முதலில் தனது தலையில்
கட்டம் போட்ட தொப்பியை அணிந்திருந்தார்.
பிறகு அதன்மீது சில சாம்பல் நிற தொப்பிகள்,
அதற்குமேல் சில பழுப்பு நிற தொப்பிகள்,
அதற்கும் மேலே சில நீல தொப்பிகள்,
எல்லாவற்றிற்கும் மேலாக சில சிவப்பு
தொப்பிகளை அடுக்கியிருந்தார்.



தொப்பிகள் விழாத வண்ணம்
அவர் தெருக்களில் இங்கு
அங்கும் நேராக நிமிர்ந்து
நடப்பார் .

"தொப்பி வாங்கலையோ
தொப்பி!
பத்தே ரூபாய் பத்தே ரூபாய்!"
என்று கூவிக்கொண்டே
செல்வார் .



ஒரு நாள் அவர் ஒரு தொப்பி கூட விற்கமுடியவில்லை. அவர் தெருவில் கிழக்கே சென்றார். பின்னர் மீண்டும் மேற்கே திரும்பினார். கூவிக்கொண்டே நடந்தார்: "தொப்பி வாங்கலையோ தொப்பி! பத்தே ரூபாய், பத்தே ரூபாய்!“

ஆனால் அன்று யாருமே தொப்பி வாங்கவில்லை. சிவப்பு தொப்பியை கூட வாங்கவில்லை. வியாபாரிக்கு மிகவும் பசித்தது. ஆனால் அவரிடம் சாப்பிடப் பணம் இல்லை.


"கிராமத்துப் பக்கம் போய் பார்ப்போம் “ என்று நினைத்தார். தலையிலிருந்த தொப்பிகள் விழாத வண்ணம் மெதுவாக ஊருக்கு வெளியே நடந்தார்.



நீண்ட நேரம் நடந்த பின் ஒரு பெரிய மரத்தடியில் வந்து சேர்ந்தார். "ஓய்வெடுக்க ஒரு நல்ல இடம்,"என்று நினைத்தார்.

பின்னர் மெதுவாக மரத்தின் அடியில் அமர்ந்தார்.அவரது தலையிலிருந்த தொப்பிகள் விழாதபடிமுதுகை மெல்ல சாய்த்துக்கொண்டு உட்கார்ந்தார்.

தொப்பிகள் நேராக உள்ளனவா என்று கையை மேலே தூக்கி தொட்டுப் பார்த்தார்.
முதலில் கட்டம் போட்ட தொப்பி
அதற்குமேல் சாம்பல் தொப்பிகள்,
அதற்குமேல் பழுப்பு நிற தொப்பிகள்,
அதற்கும் மேல் நீல தொப்பிகள்,
எல்லாவற்றிற்கும் மேலாக சில சிவப்பு தொப்பிகள்..




எல்லா தொப்பிகளும்
பத்திரமாக இருந்தன.

அவருக்கு தூக்கம்
சொக்கியது. அவர் வெகு
நேரம் தூங்கிவிட்டார்.



அவர் கண் விழித்த போது
புத்துணர்ச்சி
பெற்றிருந்தார்.



கிளம்புவதற்கு முன்
கையால் தொப்பிகளைத்
தொட்டு சரி பார்த்தார்.

அவர் தலையிலிருந்த
தொப்பி மட்டுமே
இருந்தது!




இடது பக்கம் பார்த்தார்.
எந்த தொப்பியையும் காணவில்லை.

வலது பக்கம் பார்த்தார்.
எந்த தொப்பியையும் காணவில்லை.

தனக்குப் பின்னால் பார்த்தார்.
எந்த தொப்பியையும் காணவில்லை.

மரத்தின் பின்னால் பார்த்தார்.
எந்த தொப்பியையும் காணவில்லை.



பின்னர் அவர் மரத்தின் மேலே பார்த்தார்.

அவர் என்ன பார்த்தார் தெரியுமா?



ஒவ்வொரு கிளையிலும் ஒரு குரங்கு இருந்தது

ஒவ்வொரு குரங்கின் தலையிலும் சாம்பல் பழுப்பு நீலம் அல்லது சிவப்பு நிற தொப்பி இருந்தது!

வியாபாரி குரங்குகளைப்
பார்த்தார். குரங்குகள்
வியாபாரியை பார்த்தன.

என்ன செய்வது என்று
அவருக்கு தெரியவில்லை.

முடிவில் குரங்குகளிடம் பேச
ஆரம்பித்தார்.



அவர் விரலை ஆட்டி மிரட்டினார்:
"சேட்டைக்கார குரங்குகளே
தொப்பிகளை திருப்பி தந்து
விடுங்கள்."

குரங்குகள் வியாபாரியைப்
பார்த்து விரல்களை ஆட்டி,
"கொர்! கொர்!" என்று கத்தின.



வியாபாரிக்கு மிகவும் கோபம் வந்துவிட்டது. இரண்டு கைகளையும் மடக்கி மிரட்டினார் :
"சேட்டைக்கார குரங்குகளே தொப்பிகளை திருப்பி தந்து விடுங்கள்."

குரங்குகள் வியாபாரியைப் பார்த்து கைகளை மடக்கி,
"கொர்! கொர்!" என்று கத்தின.



வியாபாரிக்கு ஆத்திரமாய் வந்தது.
அவர் தனது காலை தரையில்
உதைத்தார்.
"சேட்டைக்கார குரங்குகளே
தொப்பிகளை திருப்பி தந்து விடுங்கள்.“

குரங்குகளும் தங்கள் கால்களை
உதைத்துக்கொண்டு,
"கொர்! கொர்!" என்று கத்தின.



வியாபாரிக்கு கோபம் தலைக்கேறியது.
இந்த முறை இரண்டு கால்களையும்
தரையில் உதைத்து சொன்னார்,
"குரங்குகளே, அதிகம் தொந்தரவு
செய்யாமல் தொப்பிகளை
தந்துவிடுங்கள்! “

ஆனால் குரங்குகளும் தங்கள் இரு
கால்களையும் உதைத்துக்கொண்டு,
"கொர்! கொர்!" என்று கத்தின.



கடைசியில் வியாபாரி
கோபத்தின் உச்சியில் தன்
தொப்பியை கழற்றி
தரையில் வீசிவிட்டு
அங்கிருந்து நடக்க
ஆரம்பித்தார்.



பின்னர் ஒவ்வொரு குரங்கும்
தொப்பியை கழற்றியது . . .




சாம்பல் நிற தொப்பிகளும்,
பழுப்பு நிற தொப்பிகளும்,
நீல நிற தொப்பிகளும்,
சிவப்பு நிற தொப்பிகளும்
மரத்திலிருந்து கீழே பறந்து
விழுந்தன.



வியாபாரி அந்த தொப்பிகள் அனைத்தையும் பொறுக்கி எடுத்து மீண்டும் அவரது தலையில் அடுக்கினார்.

முதலில் கட்டம் போட்ட தொப்பி
அதற்குமேல் சாம்பல் தொப்பிகள்,
அதற்குமேல் பழுப்பு நிற தொப்பிகள்,
அதற்கும் மேல் நீல தொப்பிகள்,
எல்லாவற்றிற்கும் மேலாக சிவப்பு தொப்பிகள்.



பிறகு வியாபாரி மெதுவாக நகரத்தை நோக்கி கூவிக்கொண்டே நடந்தார்: "தொப்பி வாங்கலையோ தொப்பி! பத்தே ரூபாய் பத்தே ரூபாய் !"

முடிவு

